## பதவி வெற்றிடங்கள்

# அனர்த்த முகாமைத்துவ நிலையம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் நிலவும் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகைமைபெற்ற இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 01. உதவிப் பணிப்பாளர் (தணித்தல்) – MM 1-1 - பதவி 01

### அ. வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பதற்கான தகைமைகள்:

**(1) கல்வித் தகைமைகள் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியல் அல்லது புவிசார் பொறியியல்/புவிச்சரிதவியல் (சிறப்பு) பட்டம் அல்லது பௌதீகவியலில் சிறப்புப் பட்டமொன்றை பெற்றிருத்தல்,

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியல் அல்லது புவிசார் பொறியியல்/புவிச்சரிதவியல் (சிறப்பு) பட்டம் அல்லது பௌதீகவியல் பொதுப் பட்டம் சகிதம் துறைக்கு ஏற்புடையதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் பட்டமொன்றை பெற்றிருத்தல்.

**(2) அனுபவம் :**

மேற்கண்ட கல்வித் தகைமையைப் பெற்றுக் கொண்டதன் பிற்பாடு பதவிக்கு ஏற்புடைய விடயத்துறையில் 03 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

### ஆ. உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பதற்கான தகைமைகள் :

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் கனிஷ்ட முகாமைத்துவ சேவைப் பிரிவில் I தரத்தில் இயைபான துறையிலான பதவியொன்றில் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்திசெய்திருத்தல்.

### இ. பதவிக்குரிய கடமைகள்:

.

(1) அனர்த்த தணித்தல் சேவை வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அனர்த்த அபாயங்களை தணிக்கும் ஐந்துவித கூறுகளுக்கு ஏற்புடைய பெறுபேறு அடிப்படையிலான செயற்றிட்ட அறிக்கைகளை தயாரித்தல்.
(2) தொனிப்பொருள் பகுதிகளுக்கு ஏற்புடையதாக குறிப்பிட்ட கூறுகளின் கீழ் தகவல் மற்றும் தகவல் முறைமைகளைப் பேணுதல்.
(3) உள்ளக மற்றும் வெளியக தரப்பினர்களின் இயலளவினை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒரு வளவாளராக முனைப்பாக பங்களிப்பு வழங்குதல்.
(4) அனர்த்த அபாயங்களை தணிக்கும் செயற்றிட்டங்கள் மற்றும் திட்டங்களை தயாரிப்பதற்கு மாவட்ட உதவி பணிப்பாளர்களுடன் இணைந்து செயலாற்றுதல்.
(5) அனர்த்தங்களை தணிக்கும் செயற்றிட்ட முன்மொழிவுளைத் தயாரித்தல் மற்றும் வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தை தயாரிப்பதற்கு உதவுதல்.

ஈ. **சம்பள முறை:**

முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 2/2016இன்படி பதவிக்குரிய சம்பளம் வழங்கப்படும்.

MM 1-1 - 2016- ரூ.53,175-10x1375-15x1910- 95,575.00. வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் அரசாங்கத்தினால் காலத்துக்கு காலம் செலுத்தப்படுகின்ற ஏனைய படிகளும் வழங்கப்படும்.

உ. **வயது :**

22 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள உச்ச வயதெல்லை உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதாகாது.

## 02. உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) – MM 1-1 - பதவி 01

அ. **வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பதற்கான தகைமைகள்:**

**கல்வித் தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விவசாய விஞ்ஞானம் அல்லது புவியியல் அல்லது புவிச்சரிதவியல் அல்லது சிவில் பொறியியல் அல்லது தொடர்பாடல் பொறியியல் அல்லது தகவல் தொழினுட்பவியல் அல்லது சமூக விஞ்ஞானம் அல்லது இயற்கை விஞ்ஞானம் எனும் பாடத்துக்குரிய பட்டமொன்றை பெற்றிருத்தல்,

அத்துடன்

மேற்கூறிய ஏதேனும் பட்ட கற்கைநெறியுடன் புவிசார் தகவல் விஞ்ஞானம் (GIS) மற்றும் தொலை உணர்வு(Remote Sensing) ஒரு பாடமாக கற்றிருத்தல் வேண்டும். அல்லது குறித்த பட்ட கற்கைநெறியுடன் புவிசார் தகவல் விஞ்ஞானம் (GIS) மற்றும் தொலை உணர்வு(Remote Sensing) துறையில் ஒரு வருட அனுபவத்துடன் மூன்று வருட அனுபவம் பெற்றிருத்தல்.

ஆ. **உள்வாரி விண்ணபதாரிகளை ஆட்சேர்ப்பதற்கான தகைமைகள்:**

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் கனிஷ்ட முகாமைத்துவ சேவைப் பிரிவில் I தரத்தில் இயைபான துறையிலான பதவியொன்றில் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்திசெய்திருத்தல்.

இ. **பதவிக்குரிய கடமைகள்:**

(1) அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக ஆராய்ச்சிகளை நடத்துதல்.
(2) அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக தேசிய மட்டத்திலான ஆராய்ச்சிகளை தொடங்குதல்.
(3) அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக தேசிய மட்டத்திலான தரவு வங்கி மற்றும் தகவல் வலையமைப்பினை பேணுதல்.
(4) அனர்த்த அபாய மற்றும் அனர்த்தம் நிகழக்கூடிய பிரதேசங்கள் தொடர்பாக ஆராய்ச்சிகளை நடத்துதல்.
(5) தொலை உணர்வு (Remote Sensing) மற்றும் புவிசார் தகவல் முறைமை தொழில்நுட்பம் ஆகியவற்றை அனர்த்த முகாமைத்துவத்திற்கு பயன்படுத்துதல்.
(6) அனர்த்த முகாமைத்துவம் பொருட்டு செய்மதி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு அவசியமான சர்வதேச நிறுவனங்களுடன் ஒத்துழைப்பை வளர்த்தல்.

ஈ. **சம்பள முறை:**

முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 2/2016 இன்படி பதவிக்குரிய சம்பளம் வழங்கப்படும்.

MM 1-1 - 2016- ரூ.53,175-10x1375-15x1910- 95,575.00. வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் அரசாங்கத்தினால் காலத்துக்கு காலம் செலுத்தப்படுகின்ற ஏனைய படிகளும் வழங்கப்படும்.

உ. **வயது :**

22 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள உச்ச வயதெல்லை உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதாகாது.

## 03. உதவிப் பணிப்பாளர் (தயார்நிலை) – MM 1-1 - பதவி 01

அ. **வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பதற்கான தகைமைகள்:**

**(1) கல்வித் தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம் அல்லது வர்த்தகம் அல்லது கலை துறையில் சிறப்புப் பட்டம் அல்லது பொதுப் பட்டமொன்றை பெற்றிருத்தல்.

**(2) அனுபவம் :**

மேற்கண்ட கல்வித் தகைமையைப் பெற்றுக் கொண்டதன் பிற்பாடு பதவிக்கு ஏற்புடைய விடயத்துறையில் 03 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

ஆ. **உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பதற்கான தகைமைகள்:**

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் கனிஷ்ட முகாமைத்துவ சேவைப் பிரிவில் I தரத்தில் இயைபான துறையிலான பதவியொன்றில் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்திசெய்திருத்தல் .

இ. **பதவிக்குரிய கடமைகள்:**

(1) அனர்த்த விசேடத்துவமான பிரதிச்செயற்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்தல் (சூறாவளி, வறட்சி, வெள்ளம், மண்சரிவு).

(2) பல்வேறுபட்ட அனர்த்தங்களுக்கு உட்படக்கூடிய பிரதேசங்களை இனங்காணுதல் மற்றும் தயார்நிலை நடவடிக்கைகளைத் திட்டமிடுதல்.

(3) அனர்த்த விசேடத்துவமான எதிர்பாராத் திட்டங்களைத் தயாரித்தல்.

   i. எண்ணெய் கசிவு பற்றிய தேசிய திட்டங்கள்.
   ii. கைத்தொழில் மற்றும் இரசாயன அனர்த்த முகாமைத்துவ தேசிய திட்டங்கள்.
   iii. கதிரியக்க மற்றும் அணுசக்தி அபாயங்களுக்கான அவசர முகாமைத்துவ தேசிய திட்டங்கள்.
   iv. நீர்த்தேக்கங்கள், அணைகளுடன் தொடர்புடைய அபாயங்கள்.
   v. இனங்காணப்பட்ட பிரதேசங்களுக்கான காட்டு மற்றும் நகர்ப்புற தீ முகாமைத்துவத் திட்டங்கள்.

(4) பாடசாலை அனர்த்த பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல்.

(5) வைத்தியசாலை அவசரகாலத் தயார்நிலை திட்டமிடல் நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல்.

(6) வரவுசெலவுத் திட்டங்கள், வருடாந்த வரவுசெலவுத்திட்ட அறிக்கைகள், வருடாந்த வேலைத்திட்டங்கள், முன்னேற்ற அறிக்கைகள் ஆகியவற்றை தயாரித்தல்.

(7) மாகாண, மாநகர சபை மற்றும் நகர சபை மட்டங்களில் அவசரகால பிரதிச்செயற்பாட்டு இயலளவினை மேம்படுத்தி பலப்படுத்துதல்.

(8) அனர்த்த தயார்நிலை திட்டங்களை தயாரித்தல் மற்றும் நாளதுவரைப்படுத்துவதன் மூலம் இரண்டாம்நிலை மற்றும் தேசிய மட்டத்தில் அனைத்து அனர்த்த முகாமைத்துவ பொறிமுறை ஒன்றை உருவாக்குதலும் பலப்படுத்துதலும்.

(9) அனர்த்த முகாமைத்துவக் குழுக்கள் மற்றும் உப குழுக்களை உருவாக்குதல்.

(10) அனைத்து சமுதாய அடிப்படையிலான அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கான தரவு மூலங்களை கட்டியெழுப்புதல், அனர்த்த வரைபடமாக்கல் மற்றும் ஒத்திகை நடத்துதல்.

ஈ. **சம்பள முறை:**

முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 2/2016 இன்படி பதவிக்குரிய சம்பளம் வழங்கப்படும்.

MM 1-1 - 2016- ரூ.53,175-10x1375-15x1910- 95,575.00. வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் அரசாங்கத்தினால் காலத்துக்கு காலம் செலுத்தப்படுகின்ற ஏனைய படிகளும் வழங்கப்படும்.

உ. **வயது :**

22 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள உச்ச வயதெல்லை உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதாகாது.

## 04. தொலை உணர்வு /புவிசார் தகவல் முறைமை பகுப்பாய்வாளர் - JM 1-1 - பதவி 01

அ. **வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பதற்கான தகைமைகள்:**

**கல்வித் தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிலஅளவையியல் அல்லது புவிச்சரிதவியல் பற்றிய விஞ்ஞானமானி பட்டமொன்றை பெற்றிருத்தல்.

ஆ. **உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பதற்கான தகைமைகள்:**

மேலே குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல்,

அல்லது

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) சேவைப் பிரிவின் (MA 2-1) IIஆம் தரத்தில் இயைபான துறையிலான பதவியொன்றில் ஐந்து (05) வருடங்களுக்கு குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்திசெய்திருத்தல்.

இ. **பதவிக்குரிய கடமைகள்:**

(1) அனர்த்த அபாய பகுப்பாய்விற்காக முகாமைத்துவத்திற்குத் தேவையான தொழில்நுட்ப ஆதரவை வழங்குதல்.
(2) செய்மதி புகைப்படங்களை பகுப்பாய்வு செய்வதன்மூலம் அனர்த்ததிக்குப் பிந்திய வரைபடங்களைத் தயாரித்தல்.
(3) அபாய பகுப்பாய்வுக்கான வெளிக்கள சோதனை மூலம் தரவு சேகரித்தல் மற்றும் தரவு பகுப்பாய்வு.
(4) அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான அனைத்து வரைபடங்களையும் தயாரித்தல் மற்றும் அச்சிடுதல்.

ஈ. **சம்பள முறை:**

முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 2/2016 இன்படி பதவிக்குரிய சம்பளம் வழங்கப்படும்.

JM 1-1 - 2016- ரூ.42,600-10x755-18x1135- 70,580.00. வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் அரசாங்கத்தினால் காலத்துக்கு காலம் செலுத்தப்படுகின்ற ஏனைய படிகளும் வழங்கப்படும்.

உ. **வயது :**

22 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள உச்ச வயதெல்லை உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதாகாது.

## 05. தரவு அமைப்புகள் ஆய்வாளர் - JM 1-1 - பதவி 01

**அ. வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பதற்கான தகைமைகள் :**

**கல்வித் தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணினி விஞ்ஞானம் பற்றிய விஞ்ஞானமானி பட்டம் அல்லது விஞ்ஞானமானி பொதுப் பட்டத்துடன் கணினி விஞ்ஞானம் ஒரு பாடமாக கற்றிருத்தல்,

அல்லது

மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்/தொழிற் பயிற்சி நிறுவகத்தினால் வழங்கப்படுகின்ற கணினி விஞ்ஞானம் பற்றிய தேசிய தொழில் தகுதி (NVQ) மட்டம் ஏழு (07) க்கு குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்,

அல்லது

மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்/தொழிற் பயிற்சி நிறுவகத்தினால் வழங்கப்படுகின்ற கணினி விஞ்ஞானம் பற்றிய தேசிய தொழில் தகுதி (NVQ) மட்டம் ஆறு (06) க்கு குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் அத்துடன் குறித்த தகைமையைப் பெற்றுக் கொண்டதன் பிற்பாடு அரசாங்க, அரச கூட்டுத்தாபனம், சபை அல்லது நியதிச்சட்ட நிறுவனம் ஒன்றில் குறைந்த பட்சம் ஐந்து (05) வருடங்கள் தொடர்புடைய துறையில் அனுபவம் பெற்றிருத்தல்,

அல்லது

மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்/தொழிற் பயிற்சி நிறுவகத்தினால் வழங்கப்படுகின்ற கணினி விஞ்ஞானம் பற்றிய தேசிய தொழில் தகுதி (NVQ) மட்டம் ஐந்து (05) க்கு குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் அத்துடன் குறித்த தகைமையைப் பெற்றுக் கொண்டதன் பிற்பாடு அரசாங்க, அரச கூட்டுத்தாபனம், சபை அல்லது நியதிச்சட்ட நிறுவனம் ஒன்றில் குறைந்த பட்சம் பத்து (10) வருடங்கள் தொடர்புடைய துறையில் அனுபவம் பெற்றிருத்தல்.

**ஆ. உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பதற்கான தகைமைகள்:**

மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளை பூர்த்திசெய்திருத்தல்,

அல்லது

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) சேவைப் பிரிவின் (MA 2-1) IIஆம் தரத்தில் இயைபான துறையிலான பதவியொன்றில் ஐந்து (05) வருடங்களுக்கு குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்திசெய்திருத்தல்.

**இ. பதவிக்குரிய கடமைகள் :**

(1) அனர்த்த அபாய பகுப்பாய்விற்காக முகாமைத்துவக்குத் தேவையான தொழில்நுட்ப ஆதரவை வழங்குதல்.
(2) அனர்த்ததிற்குப் பிந்திய சேத தரவு முறைமையை நாளதுவரைப்படுத்தல் மற்றும் தரவு பகுப்பாய்வு.
(3) அனர்த்த முகாமைத்துவத்திற்கான புவிசார் தகவல் முறைமை தொடர்பான தகவல் முகாமைத்துவம் மற்றும் பகுப்பாய்வு.
(4) அனர்த்த தகவல்களை இணையத்தில் சேர்த்தல்.
(5) தரவுத்தள செய்நிரலாக்கம் (Database Programming), இணைய புவிசார் தகவல் முறைமை முகாமைத்துவம்.

ஈ. **சம்பள முறை:**

முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 2/2016 இன்படி பதவிக்குரிய சம்பளம் வழங்கப்படும்.

JM 1-1 - 2016- ரூ.42,600-10x755-18x1135- 70,580.00. வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் அரசாங்கத்தினால் காலத்துக்கு காலம் செலுத்தப்படுகின்ற ஏனைய படிகளும் வழங்கப்படும்.

உ. **வயது :**

22 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள உச்ச வயதெல்லை உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதாகாது.

## 06. வலையமைப்பு முறைமை நிர்வாகி - JM 1-1 - பதவி 01

அ. **வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பதற்கான தகைமைகள்:**

**கல்வித் தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணினி வலையமைப்பு பற்றி அல்லது தகவல் தொழினுட்ப பற்றிய பட்டமொன்றை பெற்றிருத்தல்,

அல்லது

மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்/தொழிற் பயிற்சி நிறுவகத்தினால் வழங்கப்படுகின்ற கணினி வலையமைப்பு பற்றிய தேசிய தொழில் தகுதி (NVQ) மட்டம் ஏழு (07) க்கு குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்,

அல்லது

மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்/தொழிற் பயிற்சி நிறுவகத்தினால் வழங்கப்படுகின்ற கணினி வலையமைப்பு பற்றிய தேசிய தொழில் தகுதி (NVQ) மட்டம் ஆறு (06) க்கு குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் அத்துடன் குறித்த தகைமையைப் பெற்றுக் கொண்டதன் பிற்பாடு அரசாங்க, அரச கூட்டுத்தாபனம், சபை அல்லது நியதிச்சட்ட நிறுவனம் ஒன்றில் குறைந்த பட்சம் ஐந்து (05) வருடங்கள் தொடர்புடைய துறையில் அனுபவம் பெற்றிருத்தல்,

அல்லது

மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்/தொழிற் பயிற்சி நிறுவகத்தினால் வழங்கப்படுகின்ற கணினி வலையமைப்பு பற்றிய தேசிய தொழில் தகுதி (NVQ) மட்டம் ஐந்து (05) க்கு குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் அத்துடன் குறித்த தகைமையைப் பெற்றுக் கொண்டதன் பிற்பாடு அரசாங்க, அரச கூட்டுத்தாபனம், சபை அல்லது நியதிச்சட்ட நிறுவனம் ஒன்றில் குறைந்த பட்சம் பத்து (10) வருடங்கள் தொடர்புடைய துறையில் அனுபவம் பெற்றிருத்தல்.

ஆ. **உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பதற்கான தகைமைகள்:**

மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளை பூர்த்திசெய்திருத்தல்,

அல்லது

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) சேவைப் பிரிவின் (MA 2-1) IIஆம் தர பதவியொன்றில் தொடர்புடைய துறையில் ஐந்து (05) வருடங்களுக்கு குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்திசெய்திருத்தல்.

இ. **பதவிக்குரிய கடமைகள்:**

(1) அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் செயற்பாடுகளுக்குத் தேவையான வலையமைப்பு முறைமைகளைப் பேணுதல், பராமரிப்பு செய்தல் மற்றும் நாளதுவரைப்படுத்தல்.
(2) 24 மணி நேரம் இயங்கும் அவசர செயல்பாட்டு அறைக்கு தேவையான வலையமைப்பு வசதிகளை வழங்குதல்.
(3) 24 மணி நேரம் இயங்கும் தேசிய அவசர அழைப்பு அறைக்கு (117) தேவையான வலையமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் பராமரித்தல்.
(4) அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் அனைத்து தகவல்களையும் களஞ்சியப்படுத்துவதற்குத் தேவையான தரவு களஞ்சிய முறைமைகளை பராமரித்தல் மற்றும் நாளதுவரைப்படுத்தல்.
(5) அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் மாவட்ட கூறுகளில் இணைய வசதிகளை தொடர்ந்து பேணுதல்.
(6) அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வலையமைப்பு அறையில் நிறுவப்பட்ட அனைத்து சேவையக(server) முறைமைகளை தொடர்ந்து பேணுதல் மற்றும் அவற்றை உறுதிப்படுத்தல்.
(7) அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கும் மாவட்ட கூறுகளுக்கும் இடையில் நிறுவப்பட்ட வலையமைப்பு முறைமைகளைப் பேணுதல், பராமரிப்பு செய்தல் மற்றும் நாளதுவரைப்படுத்தல்.

.

ஈ. **சம்பள முறை:**

முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 2/2016 இன்படி பதவிக்குரிய சம்பளம் வழங்கப்படும்.

JM 1-1 - 2016- ரூ.42,600-10x755-18x1135- 70,580.00. வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் அரசாங்கத்தினால் காலத்துக்கு காலம் செலுத்தப்படுகின்ற ஏனைய படிகளும் வழங்கப்படும்.

உ. **வயது :**

22 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள உச்ச வயதெல்லை உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதாகாது.

## 07. நியமனத்தின் தன்மை:

அ. நிரந்தர, ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் தொழில்கொள்வோரின் நம்பிக்கை நிதியம் பொருட்டு உரித்துண்டு.

ஆ. வெளிவாரி விண்ணப்பதாரிகளிலிருந்து தெரிவுசெய்யப்படின், அவர்கள் மூன்று (03) வருட தகுதிகூர் காலத்திற்கு உட்பட்டு நியமிக்கப்படுவார்கள்.

இ. உள்வாரி விண்ணப்பதாரிகளிலிருந்து தெரிவுசெய்யப்படின், அவர்கள் ஒரு வருட பதிற்கடமை காலத்திற்கு உட்பட்டு நியமிக்கப்படுவார்கள்.

.

## 08. ஏனைய தேவைப்பாடுகள்:

**விண்ணப்பதாரி ஒவ்வொருவரும்;**

அ. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
ஆ. பதவிக்குரிய கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்காகவும், தேவைக்கேற்ப தீவின் எந்தப் பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல்ரீதியாகவும் உளரீதியாகவும் தகுதியுடையவராய் இருத்தல் வேண்டும்.
இ. சிறந்த குணம் உடையவராய் இருத்தல் வேண்டும்.

## 09. விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முறை :

விண்ணப்பப்படிவம் www.dmc.gov.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன், அதற்கிணங்க தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை விண்ணப்ப ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதியான 2024.04.08 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்ககூடியதாக "பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம், இல. 120/2, வித்யா மாவத்தை, கொழும்பு 07" எனும் முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரர்களால் தமது விண்ணப்பப்படிவத்தில், "வெளிவாரி விண்ணப்பதாரியா" அல்லது "உள்வாரி விண்ணப்பதாரியா" என்பதுபற்றி தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பப்படிவத்தை வைத்தனுப்பும் உறையின் இடப்பக்க மேல் மூலையில் "விண்ணப்பிக்கும் பதவியை" தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

உள்வாரி விண்ணப்பதாரியாக விண்ணப்பிக்கும்போது வெளிவாரி விண்ணப்பதாரியாக விண்ணப்பிக்க முடியாது.

விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழின் பிரதி, தேசிய அடையாள அட்டையின் பிரதி, மற்றும் அனைத்து கல்விச் சான்றிதழ்கள், தொழிற்றுறைச் சான்றிதழ்கள், சேவைச் சான்றிதழ்களின் பிரதிகளை அனுப்புவது **கட்டாயமாகும்.** தபாலில் தொலைந்துபோன அல்லது தாமதமாகப் கிடைக்கும் விண்ணப்பங்கள் தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ நிலையம் பொறுப்புக்கூறாது.

.

ஏற்கனவே அரசாங்க சேவையில், மாகாண அரசாங்க சேவையில், அல்லது அரச துறையில் பணிபுரிபவர்கள் தங்களின் விண்ணப்பத்தை நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும். அவ்வாறு அனுப்பிவைக்கப்படாத அதேநேரம் **விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு பின்னர் நிலையத்துக்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

**கவனிக்கவும்:**

இந்த விளம்பரம் www.dmc.gov.lk என்ற இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

பணிப்பாளர் நாயகம்
அனர்த்த முகாமைத்துவ நிலையம்